# உங்களது பராமரிப்பைத் தொடர்புபடுத்தல்

## அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள்

### உங்களுக்குரிய ஆதரவை ஒருங்கிணைத்தல் என்றால் என்ன?

உங்களுக்குரிய ஆதரவை ஒருங்கிணைத்தல் என்பதை, உங்களைப் பற்றிய தகவல்களைப் பகிர்ந்துகொள்ளும் வழிமுறையை மேடுத்தும் நோக்குடன் சுகாதார மற்றும் ஆதரவு சேவைகளை ஒருங்கு சேர்த்தல் எனக் கொள்ளலாம். இதன் இலக்கு, உங்களுக்கு ஆதரவு அளிக்கும் ஆட்களுக்கு தகவல்கள் விரைவாகவும் பத்திரமாகவும் கிடைப்பதை உறுதிப்படுத்துவதாகும்.

### உங்களுக்குரிய ஆதரவை ஒருங்கிணைப்பது ஏன் முக்கியம்?

உங்களுக்கு நேரடியாக ஆதரவு அல்லது வேறு சேவைகளை சுகாதார மற்றும் ஆதரவுத் தொழில்சார் நிபுணர்கள் வழங்கும்போது, அவர்களுக்கு உதவும் முக்கிய தகவல்களை உடனுக்குடன் வாசித்து அறியக்கூடியதான “ஒருங்கிணைந்த மின்னியல் பார்வை” வசதியை (“connected electronic view”) உங்களுக்குரிய ஆதரவை ஒருங்கிணைத்தல் வழங்குகிறது.

இந்தத் தகவல்களை விரைவாகப் பெறக்கூடிய வசதி நிபுணர்களுக்கு உதவியாக இருப்பதுடன், உங்களுக்கு, மீள்

உரையாடல்களையும், பரிசோதனைகள்/ சந்திப்பு நியமனங்களையும் தவிர்த்துககொள்வதன் மூலம் நேரத்தை மீதப்படுத்தியும் தரக்கூடும். சுகாதார மற்றும் ஆதரவு தொழில்சார் நிபுணர்கள் உங்களுக்கு அவசியமான ஆதரவை வழங்குவது சம்பந்தமாக மேலும் விரைவாக முடிவுகளை எடுக்கக்கூடியதாக இருக்கும். சில சமயங்களில், அவசரமானதொரு சூழலில் உங்களுக்கு உதவி வழங்கப்படும்போது, இந்த தகவல்கள் தீர்க்கமானவையாக அமையலாம்.

## உங்களுக்குரிய ஆதரவை ஒருங்கிணைப்பதால் எனக்கு என்ன பயன்?

- உங்களுக்கு ஆதரவு வழங்குவோர் அவ்வாறு *வழங்கும்போதே* முக்கிய தகவல்களை உடனுக்குடன் பார்க்கக்கூடியதாக இருக்கும்
- உங்களுக்குரிய ஆதரவு பற்றி விரைவாக முடிவுகள் எடுக்கப்படலாம்
- உங்கள் கதையை நீங்கள் ஒரு தடவை சொன்னால் போதும், ஏனைய சுகாதார மற்றும் ஆதரவு தொழில்சார் நிபுணர்கள் அதன்மேல் உங்களுடன் கலந்து செயல்படுவார்கள்
- அனாவசிய மற்றும்/ அல்லது மீள்சந்திப்பு நியமனங்களையும் பரிசோதனைகளையும் நீங்கள் தவிர்த்துக்கொள்ளலாம். உங்கள் விடயத்தில் ஏற்கனவே என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று உங்களைக் கவனிப்பவர்கள் பார்த்துத் தெரிந்துகொள்வார்கள்
- உங்களுக்கு ஆதரவு வழங்கும் ஏனைய ஆட்களையும் அமைப்புக்களையும் பார்ப்பது சுலபம்
- வெவ்வேறு அமைப்புக்களில் உள்ள ஆட்கள், உங்களுக்குக் கிடைக்கும் ஆதரவையும் அனுபவத்தை மேம்படுத்தும் பொருட்டு, ஒன்றாகச் சேர்ந்து பணியாற்ற இது உதவும்

- உங்களைப் பற்றிய தகவல்களை எவரெவர் பார்த்தார்கள் என்கிற முழுத் தணிக்கைத் தடங்களை அமைப்பு ஒன்றினால் வழங்கமுடியும். தகவல்களைத் தொலைபேசி அல்லது மின்னஞ்சல்கள் வழியாகப் பகிர்ந்துகொள்ளும் தற்போதைய வழிமுறைகள் எந்த நேரமும் சாத்தியமாகாது.

## என்ன தகவல்கள் பகிரப்படும்?

உங்களுக்குரிய ஆதரவை ஒருங்கிணைத்தல், கீழ்க்கண்டவை உட்பட, வளர்ந்தோர் மற்றும் குழந்தைகளின் சுகாதாரநிலை பற்றிய தகவல்களையும் வளர்ந்தோருக்கான சமூக ஆதரவு பற்றிய தகவல்களையும், பகிர்ந்துகொள்கிறது:

- உங்கள் பெயர். முகவரி மற்றும் என் எச் எஸ் எண்
- சந்திப்பு நியமனங்கள் மற்றும் மருத்துவமனை வருகைகள்
- முக்கிய சமூக ஆதரவு அல்லது நோய் கண்டுபிடிப்பு, மருந்துகள் மற்றும் ஒவ்வாமை விபரங்கள் உட்பட, சிகிச்சையின் வரலாறு
- இரத்தப் பரிசோதனைகள் மற்றும் எக்ஸ்-ரே/ ஸ்கான் போன்ற சமீபத்திய முடிவுகள்.

இந்தத் தகவல்கள் யாவும் ஏற்கனவே சுகாதார மற்றும் ஆதரவு தொழில்சார் நிபுணர்களிடையே பகிரப்படும், அல்லது உங்களை சேவைகளுக்காக அல்லது சிகிச்சைக்காக பாரப்படுத்தல் செய்யும்போது கோரப்படும் அதே தகவல்களே. இருப்பினும், அந்தத் தகவல்களை உங்களுக்குரிய ஆதரவை ஒருங்கிணைத்தல் வழியாக “நிகழ் நேரத்தில்“, அவர்கள் உங்களுக்கு ஆதரவு தரும் வேளையில் பகிர்ந்துகொள்ளக்கூடிய வசதியானது, உங்களைப் பற்றிய தகவல்களை, குறிப்பாக ஓர் அவசர சூழலில், அறிந்துகொள்ளும் பாதுகாப்பு மிக்க வழியாகக் காணப்படுகிறது.

## என்ன தகவல்கள் பகிரப்படமாட்டா?

குழந்தைகளின் சமூக ஆதரவு பதிவுகள் தற்போது பகிரப்படுவதில்லை. அதே போல, பாலியல் சுகாதார நிலைமை, சுவீகாரம் மற்றும் உதவியுடன் கருத்தரித்தல் போன்ற சட்ட விலக்குப் பெற்ற "உணர்வுகளைப் பாதிக்கும்" தகவல்களும் பகிரப்படமாட்டா.

## இது  செயல்படுவது எப்படி?

உங்களுக்கு சிகிச்சை அல்லது ஆதரவு வழங்கும் அமைப்பின் பல்வேறு பதிவு முறைமைகளில் இருந்து "கூட்டு மின்னியல் பார்வை" ஒன்றின் மூலம் தகவல்கள் ஒருங்கு சேர்க்கப்படுவதே உங்களுக்குரிய ஆதரவு ஒருங்கிணைத்தல் ஆகும். தகவல்கள் யாவும் வாசிப்பதற்கு மட்டும் அனுமதிக்கும் சுருக்கமான பார்வை வட்டத்தினுள் கொண்டுவரப்படுகின்றன. அவற்றை சுகாதார மற்றும் ஆதரவு தொழில்சார் நிபுணர்கள் தத்தம் பதிவுப் பொறிமுறைகளூடாக அணுகலாம். ஏற்கனவே உள்ள உங்கள் பதிவுகளை அது சேகரிக்கவோ, மாற்றவோ முனையாது. உங்கள் பதிவுப் பொறிமுறை திறந்திருக்கும்போது மட்டுமே அவற்றைப் பார்க்க முடியும். அவற்றை வேறெங்கும் சேமித்து வைக்கவோ, பகிர்ந்துகொள்ளவோ இயலாது, உங்கள் தகவல்களைப் பார்க்க அதிகாரம் உள்ளவர்கள் மாத்திரம் அவற்றைப் பார்க்கலாம்.

## எனது தகவல்களை யார் பார்க்கலாம்?

உங்களுக்கு ஆதரவு வழங்குவதில் நேரடி ஈடுபாடு கொண்ட ஆட்கள் மட்டும், நீங்கள் அவர்களைச் சந்திக்கும் நேரத்திலும், இடத்திலும், அல்லது அவர்கள் உங்களைப் பார்க்கத் தயாராகும்போது, சட்டப்படி அவற்றைப் பார்வை இடலாம்.

## தென்மேற்கு இலண்டனில் எந்த அமைப்புக்கள் தகவல் பகிர்வைச் செய்கின்றன?

உங்களுக்குரிய ஆதரவை ஒருங்கிணைக்கவும் நடைமுறையில் பங்குபற்றும் அமைப்புகள், தென்மேற்கு இலண்டனிலும் தென்மேற்கு இலண்டனுக்கு வெளியே அவை

ஆதரவு வழங்கக்கூடிய பகுதிகளிலும் சுகாதார மற்றும் ஆதரவுப் பகிர்வை செயல்படுத்தும் வகையில், எந்நேரமும் அதிகரித்துச் செல்கின்றன.

தற்போது தென்மேற்கு இலண்டனில் பங்குபற்றும் அமைப்புக்கள் வருமாறு:

- அறக்கட்டளை மருத்துவமனைகள்
- ஜிபி சிகிச்சை நிலையங்கள்
- சமூக சேவைகள்
- உளநல சேவைகள்
- சமூக ஆதரவு சேவைகள்
- என் எச் எஸ் 111 மற்றும் பணி நேரத்துக்கு அப்பாலான சேவைகள்
- சில “ஹொஸ்பிசஸ்” காப்பகங்கள், சமூக மருந்தகங்கள் மற்றும் ஆதரவு இல்லங்கள்.

உங்களுக்குரிய ஆதரவை ஒன்றிணைக்கவும் நடைமுறையில் ஒரு பகுதியாக உள்ள அனைத்து அமைப்புக்களின் முழுப் பட்டியலை எங்கள் இணையத்தளத்தில் நீங்கள் பார்க்கலாம் www.swlondon.nhs.uk/ourwork/connectingyourcare

## தென்மேற்கு இலண்டனுக்கு வெளியே எந்த அமைப்புக்கள் தகவல் பகிர்வைச் செய்கின்றன?

கோவிட்-19 பெருந்தொற்று நோயின் விளைவாக, தகவல் பகிர்வு தென்மேற்கு இலண்டனுக்கு வெளியேயும் இலண்டன் அடங்கலும் உள்ள மருத்துவ அறக்கட்டளை மனைகளுக்கும் ஜிபி சிகிச்சை நிலையங்களுக்கும் இடையிலான தகவல்கள் பகிர்வை உள்ளடக்கும் வகையில் விரிவாக்கப்பட்டுள்ளது. இது சூழவுள்ள பகுதிகளுக்கும் விஸ்தரிக்கப்படலாம்.

இந்தப் பகிர்வு, கோவிட்-19 பெருந்தொற்று நோயின்போது, நோயாளர்களை ஆதரித்த சுகாதார மற்றும் ஆதரவு நிபுணர்களுக்கு தீர்க்கமான வகையில் உதவியமை நிரூபிக்கப்பட்டுள்ளது. தற்போது (நோயாளர்கள் நைட்டிங்கேல் மருத்துவமனைக்கு மாற்றப்பட்டது போன்று

அல்லது நோயாளர்களுக்கு தங்கள் மாவட்டத்துக்கு வெளியே உள்ள அவசர மையங்களில் ஜிபி அல்லது அவசர சிகிச்சை தேவைப்பட்டது போன்று) தங்கள் பகுதிக்கு வெளியே அவசர ஆதரவுக்கு பொதுவாக மாற்றப்படுகிறார்கள். இந்தத் தகவல் பகிர்வு வழிமுறைகள், பெருங்கொள்ளை நோய் நீடிக்கும் காலத்தில், தகவல்கள் பகிர்வு சரிவரக் கையாளப்படவேண்டிய அவசியம் காரணமாக தொடர்ந்து கடைப்பிடிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. உங்களுக்குரிய ஆதரவை ஒருங்கிணைத்தல் நடைமுறையில் ஈடுபடும் ஒவ்வோர் அமைப்பும் தனது இணையத்தளத்தில் அந்தரங்கம் காத்தல் அறிவித்தல் ஒன்றை வெளியிடவேண்டும். தகவல்கள் பரஸ்பரம் பகிரப்படும் அமைப்புகளின் விபரங்களை அது கொண்டிருப்பதுடன், கோரப்படும்போது அதனைப் பார்க்கக்கூடியதாக இருத்தல் வேண்டும்.

உங்களுக்குரிய ஆதரவை ஒருங்கிணைத்தல் நடைமுறையில் ஒரு பகுதியாக உள்ள அனைத்து அமைப்புக்களதும் முழுப் பட்டியலை எங்கள் இணையத்தளத்தில் நீங்கள் காணலாம் www.swlondon.nhs.uk/ourwork/connectingyourcare

## என்னைப் பற்றிய தகவல்கள் பாதுகாப்பாக இருக்குமா?

ஆம். உங்களைப் பற்றிய தகவல்கள், தற்போதுள்ள தரவுகள் பாதுகாப்பு சட்டத்தின்படி பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளன. சுகாதார மற்றும் ஆதரவு தொழில்சார் நிபுணர்கள் உங்களுக்கு நேரடியாக ஆதரவு வழங்கும்போது மாத்திரம் உங்கள் தகவல்களைப் பார்க்கலாம். உங்களைப் பற்றி பகிர்ந்துகொள்ளப்பட்ட தகவல்களை அவர்கள் பத்திரமாகவும், இரகசியமாகவும் வைத்திருத்தல் வேண்டும். உங்களுக்குரிய ஆதரவை ஒருங்கிணைத்தலை இணையத்தில் நேரடியாக அணுக இயலாது. சுகாதாரம் மற்றும் ஆதரவு அமைப்புக்கு உட்பட்ட பாதுகாப்பான வலையமைப்பு ஒன்றின் ஊடாகவே அதனை அணுகலாம். அவ்வாறு அணுகும் அதிகாரம் வழங்கப்பட்டவர்களே, உங்களைப் பற்றி மற்ற அமைப்புக்களிடம் இருந்து வந்த தகவல்களைப் பார்க்க இயலும்.

## எனது சொந்தத் தகவல்களை நான் பார்க்கக்கூடியதாக இருக்குமா?

நீங்களாகவே உங்களுக்குரிய ஆதரவை ஓன்றிணைத்தலை அணுக இயலாது. ஆனால் அமைப்பு ஒன்று உங்களைப் பற்றி என்ன தகவல்களை கொண்டுள்ளது, மற்றும் பகிர்ந்துகொள்கிறது என்பதை, விடயத்தை அணுகும் கோரிக்கை (Subject Access Request (SAR)) ஒன்றை உங்கள் சுகாதார அல்லது ஆதரவு பற்றிய பதிவுகள் கொண்ட அமைப்பு ஒன்றுக்குச் செய்வதன் மூலம் அறிந்துகொள்ளலாம்.

அவ்வாறான அமைப்பு உங்களைப் பற்றித் தன்வசம் உள்ள *அனைத்து* தகவல்களையும் உங்களுக்குரிய ஆதரவை ஓன்றிணைத்தலுடன் பகிரமாட்டாது என்பதை தயவு செய்து நினைவில் கொள்ளவும். உங்களுக்கு ஆதரவு வழங்குவோருக்குத் தேவை என இணங்கப்பட்ட முக்கிய தகவல்கள் மாத்திரம் பகிரப்படும். குறிப்பாக என்ன பகிரப்படுகிறது என்பது பற்றிய தகவல்களை தென்மேற்கு இலண்டன் உங்களுக்குரிய ஆதரவை ஒருங்கிணைத்தல் இணையத்தளத்தில் பார்க்கலாம் https://www.swlondon.nhs.uk/ourwork/connectingyourcare

விடயத்தை அணுகும் கோரிக்கை பற்றிய மேலதிக தகவல்களுக்கு இந்த இணையத்தளம் செல்லவும் https://ico.org.uk/your-data-matters/your-right-of-access/

## இதுவும் சுருக்கமான  ஆதரவுப் பதிவேடும் (Summary care Record (SCR)) ஒத்தவையா?

இல்லை. உங்களுக்குரிய ஆதரவை ஒருங்கிணைத்தல், சுருக்கமான ஆதரவுப் பதிவேட்டைவிடப் பரவலான அமைப்புக்களிடம் இருந்து கிடைக்கும் தகவல்களை வழங்குகிறது. பின்னையது உங்கள் ஜிபி பதிவேட்டின் உபபிரிவு தகவல்களை மட்டுமே காண்பிக்கும்.

## என்னைப் பற்றிய தகவல்களைப் பகிர்ந்து கொள்ளும் தெரிவில் இருந்து முன்னரே நான் விலகி இருந்தால் இது

## உங்களுக்குரிய ஆதரவை ஒருங்கிணைத்தல் விடயத்தில் தன்னியக்கமாக பின்பற்றப்படுமா?

ஐக்கிய இராச்சிய தரவுகள் பாதுகாப்புச் சட்டத்தில் ஏற்பட்ட மாற்றங்கள் காரணமாக வேறு முறைமைகளில் இருந்து விலகல் கோரிக்கைகளை நிறைவேற்ற இயலாது.

உங்கள் சுகாதார மற்றும் ஆதரவுப் பதிவுகளில் எவற்றையும் பகிர்ந்துகொள்ள நீங்கள் விரும்பாவிடில், சம்பந்தப்பட்ட உங்கள் பதிவு(கள்) உள்ள அமைப்பு)கள்(-இன் தரவுகள் பாதுகாப்பு அலுவலருடன் தொடர்பு கொண்டு, உங்கள் தகவல்களை உங்களுக்குரிய ஆதரவை ஒருங்கிணைத்தலுடன் பகிர்வதை “ஆட்சேபிப்பதாக“ அவருக்கு ஆலோசனை வழங்கவேண்டும். தரவுகள் பாதுகாப்பு அலுவலருடன் எப்படித் தொடர்பு கொள்வதென்ற விபரங்கள் ஒவ்வொரு அமைப்பினதும் அந்தரங்கம் காத்தல் அறிவித்தலில் இருக்கும். நீங்கள் “ஆட்சேபம்“ சமர்ப்பிக்கும் ஒவ்வோர் அமைப்பும் உங்கள் கோரிக்கையை மீளாய்வு செய்து நேரடியாகப் பதிலளிக்கும்.

ஒன்றுக்கு மேற்பட்ட அமைப்புக்களில் உங்கள் பதிவுகள் இருந்தால், நீங்கள் ஒவ்வோர் அமைப்பையும் தனித்தனியாகத் தொடர்பு கொள்ளவேண்டும்.

## மேலும் தகவல்களுக்கு நான் எங்கே செல்லலாம்?

உங்களுக்குரிய ஆதரவை ஒருங்கிணைத்தல் பற்றிய மேலதிக தகவல்களுக்கு, தயவு செய்து செல்லவும்:
www.swlondon.nhs.uk/connectingyourcare

அல்லது தொடர்பு கொள்ளவும்:
மின்னஞ்சல் மூலம் connectingyourcare@swlondon.nhs.uk
தொலைபேசியின் மூலம்: 0203 668 3100